### ஜப்பான் ஹிரோசே நிறுவனம் – திருவள்ளூர் மாவட்டத்தில்

# மின்சார - மின்னணு இணைப்பிகள் உற்பத்தித் திட்டம் துவக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!




சென்னை, மார்ச் 12–

**ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிரோசே நிறுவனம், ரூ.100 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில் 100 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் மின்சார / மின்னணு இணைப் பிகள் (Electrical / Electronic Connectors) உற்பத்தித் திட் டம் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன் னிலையில் நேற்று (11.03.2026) தலைமைச் செய லகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச் சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிரோசே நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல் லியில் 100 கோடி ரூபாய் உறுதி யளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், மின்சார / மின்னணு இணைப் பிகள் (Electrical / Electronic Con nectors) உற்பத்தித் திட்டம் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப் பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு அதிக எண் ணிக்கையிலான வேலைவாய்ப் புகளை உருவாக்கி, மாநிலம் முழுவதும், சீரான, பரவலான மற்றும் அனைவரையும் உள்ள டக்கிய வளர்ச்சியை உருவாக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முன் னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், மின்னணு வியல், மின் வாகனம் மற்றும் அது சார்ந்த துறைகளிலும், மின் னணுவியல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிலும் முதன்மை மாநிலமாக தமிழ் நாடு விளங்குகிறது. அத்துடன் ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டிலும், தமிழ்நாடு முன் னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்நிலையை மேலும் மேம்படுத்திடும் வகை யில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற் கொண்டு தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்த்துள் ளது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிரோசே எலக்ட்ரிக் நிறுவனம், பலமுனை இணைப்பிகள் (Multi pole connectors). கோஆக்சியல் இணைப்பிகள் (Coaxial Connec tors) மற்றும் பிற மின்னணு உப கரணங்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகி றது. ஹிரோசே எலக்ட்ரிக் சென்னை பிரைவேட் லிமிடெட், இந்நிறுவனத்தின் துணை நிறுவ னமாகும்.

இந்நிறுவனம், 100 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முத லீடு மற்றும் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவள்ளூர் மாவட் டத்தில் உள்ள பூந்தமல்லியில் மின்சார / மின்னணு இணைப் பிகள் உற்பத்தி ஆலை அமைக்க முன்வந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன் றைய தினம் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் முன்னிலை யில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முரு கானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழி காட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற் றும் தலைமைச் செயல் அலுவ லர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஹிரோசே உற்பத்திக் குழுமத்தின் தலைவர் மற்றும் நிறுவன நிர்வாகக்குழு இயக்கு நர் யோஷிஹிரோ குஞ்சி, தலைமை செயல் அலுவலர், ஆசியன் உற்பத்திக் குழுமம் எஸ்.கணேஸ்வரன், ஹிரோசே நிறுவனத்தின் திட்டமிடல் குழு சார்ந்த யூட்டா மியாஷிடா மற் றும் யூ ஒஹூரா மற்றும் சந்தைப் படுத்துதல் தலைவர் ராஜேஷ் மணி மற்றும் அரசு உயர் அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

### எரிசக்தித் துறை மேம்பாடு தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கும் –

# கலிஃபோர்னியா பல்கலைக்கழகம் பெர்க்லி இடையே ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது!




சென்னை, மார்ச் 12

**எரிசக்தித் துறை மேம்பாடு தொடர்பாக தமிழ்நாடு அரசிற்கும் கலிஃபோர்னியா பல்கலைக்கழகம் பெர்க்லி இடையே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந் துணர்வு ஒப்பந்தம் மேற்கொள் ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன் னிலையில் நேற்று (11.3.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ் நாட்டின் மின்சார துறை வளர்ச்சி மற்றும் பசுமை எரிசக்தி பயன் பாட்டினை வலுப்படுத்தும் நோக் கில், தமிழ்நாடு அரசிற்கும் அமெ ரிக்காவின் புகழ்பெற்ற கலிஃபோர்னியா பல்கலைக்கழ கம், பெர்க்லி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசின் எரிசக்தி துறை கூடுதல் தலைமை செய லாளர் மற்றும் அமெரிக்காவின் பெர்க்லியில் உள்ள கலிஃபோர் னியா பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர்/ கல்வித் திட் டமிடல் மற்றும் சர்வதேச அலுவ லர் ஆகியோர் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட னர்.

கலிஃபோர்னியா பல்கலைக் கழகம், உலகளவில் எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆய்வுகளில் முன்னணி கல்வி நிறுவனமாக திகழ்கிறது. பசுமை எரிசக்தி தொழில்நுட்பம், மின் சார சந்தை அமைப்பு, எரிசக்தி சேமிப்பு தொழில்நுட்பங்கள் மற் றும் காலநிலை கொள்கைகள் போன்ற துறைகளில் சிறந்த அனுபவம் கொண்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் மூலம் தமிழ்நாடு மின்சாரத் துறையின் எதிர்கால வளர்ச்சி யினை கருத்தில் கொண்டு, அதி கரித்து வரும் மின்தேவையை குறைந்த செலவில் வலுவான மற்றும் நிலைத்தன்மை கொண்ட மின்சார அமைப்பிற்கு திட்டமிடல், புதுபிக்கத்தக்க எரி சக்தி உற்பத்தி மற்றும் ஒருங்கி ணைப்பு, மின்கட்டமைப்புக்கு ஏற்ப மின்சார சேமிப்பு அமைப் புகள் மற்றும் மேம்பாடு, மின்சார சந்தை வடிவமைப்பு மற்றும் ஒழுங்குமுறை கொள்கை, மின்தொடரமைப்பு மற்றும் கட் டமைப்பை நவீனமயமாக்கல், காலநிலைக்கேற்ப நெகிழ்வு தன் மையுடன் கூடிய மின்சார அமைப்பு, தமிழ்நாடு மின்சார துறையில் பொறியாளர்கள் மற் றும் அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்தல் உள்ளிட்ட முக்கிய திட்டங்களில் ஒத்துழைப்பு ஏற்படுத்தப்பட உள் ளது.

இந்த ஒத்துழைப்பு மூலம் அறிவு பரிமாற்றம், கூட்டு ஆய்வு மற்றும் தொழில்நுட்ப ஆலோச னைகள் வழங்கப்பட்டு, தமிழ் நாட்டில் நவீன, வலுவான மற் றும் நிலைத்தன்மை கொண்ட மின்சார அமைப்பை உருவாக்க இயலும். மேலும், இந்த ஒப்பந் தத்தின் அடிப்படையில் மேற் கொள்ளப்படும் திட்டங்கள் மற் றும் செயல்பாடுகள் இருதரப்பும் இணைந்து தீர்மானிக்கும் தனி ஒப்பந்தங்கள் மூலம் செயல்படுத் தப்படும்.

இந்த ஒப்பந்தம் தமிழ்நாட் டின் பசுமை எரிசக்தி வளர்ச்சிக் கும், மின்சார துறையின் திறன் மேம்பாடு மற்றும் நம்பகமான மின்விநியோகம் ஆகியவற்றை மேலும் வலுப்படுத்துவதில், முக் கிய பங்கு வகிக்கும்.

இந்நிகழ்வின்போது தலை மைச் செயலாளர் நா. முருகானந் தம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் /தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகி ருஷ்ணன், எரிசக்தித்துறை கூடு தல் தலைமைச் செயலாளர் (மு. கூ.பொ) மங்கத் ராம் சர்மா, இணை மேலாண்மை இயக்கு நர் (நிதி) விஷு மஹாஜன், தமிழ் நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் ம. கோவிந்தராவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந் தனர்.

### ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளாக ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் :

# பெரியார், அண்ணா, கலைஞர் கண்ட கனவுகளுக்கு முதலமைச்சர் செயல்வடிவம் கொடுத்திருக்கிறார்!

## சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!




சென்னை,மார்ச்.12-

***சென்னை விக்டோரியா அரங்கில், முதல மைச்சர் அவர்கள் தலைமையில், அகில இந் திய குடிமைப் பணிகள் தேர்வின் வெற்றியா ளர்களுக்கான பாராட்டு விழா, நேற்று நடைபெற்றது. இதில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு விழா வுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசி னார்.***

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

*"கிராமங்களைச் சேர்ந்த ஏழை எளிய குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளாக வர வேண்டும். இதுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத் தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ட கனவு. அந்தக் கனவுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு செயல்வடிவம் கொடுத்திருக்கி றார்கள்"*

*முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்ட மான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், பயிற்சி பெற்று யு.பி.எஸ்.சி. (UPSC) தேர்வில் வெற்றிபெற்றுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதிலும், வாழ்த்துவதிலும் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைக்கு 'நான் முதல்வன்' திட்டம் எந்த அளவுக்கு முடிவு களை (results) கொடுத்திருக்கிறது என்பதை, நம் கண்கள் முன்பாகவே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.*

**முதல் 10 இடங்களில்...**

*அதிலும் இந்த ஆண்டு ஒரு கூடுதல் சிறப்பு என்னவென்றால், அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களுக்குள் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் வந்திருக்கிறீர்கள். அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்ற தங்கை ராஜேஸ்வரி சுவே அவர்களுக்கும், ஏழாம் இடம் பெற்ற தம்பி ராஜா மொகை தீன் உள்ளிட்ட 56 பேருக்கும் எங்களின் வாழ்த்துகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கி றோம்.*

*இங்கு இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் நம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஒரு முன்மா திரியாக இருக்கிறீர்கள். யு.பி.எஸ்.சி. தேர்வுக் குப் படிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம், உங் களால் இன்று தமிழ்நாட்டு இளைஞர்களிடம் அதிகமாக இருக்கிறது. அந்த ஆர்வம் அதிக மாக இருந்தாலும், அவர்களுக்கான பொரு ளாதாரம்தான் மிகப்பெரிய தடையாக இருந் தது. ஆகவே, யு.பி.எஸ்.சி. தேர்வுக்குப் படிக்கின்ற மாணவர்களின் கனவை நன வாக்க, அவர்களுக்கு உறுதுணையாக இருக் கின்ற வகையில், 'நான் முதல்வன்' போட்டித் தேர்வுப் பிரிவுகள் என்கின்ற ஒரு தனிப்பி ரிவை நம் முதலமைச்சர் அவர்கள் 2023-ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள்.*

**ரூ.7,500 உதவித் தொகை**

*இந்தத் திட்டத்தின் கீழ், 1,000 மாணவர்க ளைத் தேர்வு செய்து, அவர்கள் முதல்நிலைத் தேர்வுக்குப் படிக்க, மாதம் 7,500 ரூபாய் உத வித் தொகை வழங்கப்படுகிறது. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, அடுத்து முதன்மைத் தேர்வுக்குப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு முறை நிதியுதவியாக (One-time grant) 25,000 ரூபாய் வழங்கப்படுகிறது. முதன்மைத் தேர் வில் தேர்ச்சி பெற்று அடுத்து நேர்முகத் தேர் வுக்கு செல்வோருக்கு 50,000 ரூபாயும் ஊக் கத்தொகையாக நம் அரசு வழங்குகிறது. இத்துடன் சேர்த்து யு.பி.எஸ்.சி. தேர்வர்க ளுக்கு (UPSC aspirants) தங்கிப் பயிலும் பயிற்சி மைய வசதியும் செயல்பட்டுக் கொண்டிருக் கிறது.*

*இதனால், சென்னையில் இருக்கின்ற மாண வர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். உங்கள் பெற்றோர்களின் இடத்திலிருந்து நம் 'நான் முதல்வன்' திட்டத் தின் மூலமாக உங்களுக்குப் பக்கபலமாக, உறு துணையாக நம் முதலமைச்சர் அவர்கள் இருக் கிறார்கள்.*

**முதன்மையான வெற்றி**

*இப்போது தமிழ்நாடு முழுவதும் யு.பி.எஸ். சி தேர்வுக்குப் படிக்கின்ற ஆர்வம் இளைஞர் களிடம் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைய பேர் 'நான் முதல்வன்' கல்வி உதவித்தொகைக்கான தகுதித் தேர்வை எழுதிக் கொண்டிருக்கிறார் கள். தமிழ்நாட்டு இளைஞர்களிடம் இந்த ஆர்வத்தை உண்டாக்கியதுதான் இந்தத் திட் டத்தின் முழுமையான, முதன்மையான வெற்றி.*

*முன்பெல்லாம் யு.பி.எஸ்.சி. தேர்வுக்குப் படிக்க வேண்டும் என்றால் நிறைய பேர் டெல்லிக்குச் செல்லவேண்டும். ஆனால் 'நான் முதல்வன்' திட்டம் வந்த பிறகு, டெல்லிக்குச் சென்று படித்தவர்கள் கூடத் தமிழ்நாட்டி லேயே படிக்கலாம் என்று இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லா வகை யிலும் யு.பி.எஸ்.சி. தேர்வர்களுக்கு நாங்கள் ஆதரவு தருகிறோம். டெல்லியில் இருக்கக்கூ டிய தனியார் பயிற்சி மையங்களை விட, சிறப் பான பயிற்சிகளை நம் அரசு சார்பாக வழங்கி வருகிறோம்.*

**கலைஞர் கண்ட கனவு**

*எனவே, தமிழ்நாட்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 100 பேராவது யு.பி. எஸ்.சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என் கின்ற இலக்கை வைத்து நம் துறை செயல் பட்டு வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த, குறிப்பாகக் கிராமங்களைச் சேர்ந்த ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளாக வர வேண்டும். இது தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ட கனவு. அந்தக் கனவுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குச் செயல்வடிவம் கொடுத்திருக்கிறார்கள்.*

*'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாகத் தேர்வாகி இருக்கக்கூடிய அந்த 56 வெற்றியா ளர்களுக்கும் ஒரு வேண்டுகோள். நீங்கள் எதிர்காலத்தில் மிக உயரிய பதவிகளுக்குச் செல்லப் போகிறீர்கள். முக்கியமான துறை களை எல்லாம் நிர்வாகம் செய்யப் போகிறீர் கள். உங்களின் பதவிகளை, அதிகாரங்களைச் சாமானிய மக்களை உயர்த்திவிடப் பயன்ப டுத்துங்கள் என்று உங்களை எல்லாம் உரிமை யோடு, அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்த வெற்றிக்கரமான முடிவு களை சாத்தியமாக்கிய நான் முதல்வன் குழு வினருக்கு நம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வோம். உங்களின் அரசு பணி சிறக்கட் டும்.*

*இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன்.*

*மனித வள மேலாண்மை துறை அமைச்சர் சகோதரி கயல்விழி செல்வராஜ் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களையும், மேயர், துணை மேயர், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அரசு கூடுதல் தலை மைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், அனைத்து அரசு அதிகாரிக ளையும், நான் முதல்வன் போட்டித் தேர்வு கள் பிரிவின் பயிற்சியாளர்கள், யு.பி.எஸ்.சி., தேர்வில் வெற்றி பெற்ற இளைஞர்கள், அவர் களின் பெற்றோர்கள், உறவினர்கள், தேர் வுக்கு தயாராகிக்கொண்டு இருக்கின்ற அனைத்து யு.பி.எஸ்.சி மாணவர்கள், பத்தி ரிகை மற்றும் ஊடக நண்பர்கள் என இந்த அரங்கில் இருக்கின்ற அனைவரையும் வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன்.*

*நன்றி, வணக்கம்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை ஆற்றினார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு குறித்து நேற்று (11.03.2026) தலைமைச் செயலகத்தில், உணவகங்களின் பிரதிநிதிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் எரிவாயு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உணவகங்கள் – தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் –

# எரிவாயு விநியோக நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 12–

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நேற்று (11.03.2026) உணவகங்கள் மற் றும் தொழில் நிறுவனங்களின் பிரதி நிதிகள் மற்றும் எரிவாயு விநியோக நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட் டம் உணவு மற்றும் உணவுப்பொ ருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலை மையில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் அவர்கள் முன்னி லையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் தொழில் நிறுவனங்கள் மற்றும் உணவகங்களில் ஏற்பட்டுள்ள கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக 10.03.2026 அன்று கூட்டம் நடத்தி பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழு தியுள்ளார்.

போரால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் பொதுமக்களும் வணிக நிறுவனங்களும் தமிழ்நாட் டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப் பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் குறிப்பாக, வணிக எரி வாயு தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட் டுள்ள உணவகங்களுக்குத் தேவை யான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட வேண் டும் என்றும் தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தைப் பெற்று வழங்கிட வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

அதைத்தொடர்ந்து உணவு மற் றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரை இதுதொடர்பாக உணவகங்கள் மற்றும் தொழில் நிறு வனங்களின் பிரதிநிதிகளுடன் கூட் டம் நடத்திட ஆணையிட்டார்கள்.

அதன்படி இன்று (11.03.2026) தலைமைச் செயலகத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலை மையில் உணவு மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற் றும் எரிவாயு விநியோக நிறுவனங்க ளான இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோல் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோல் நிறுவனங்களின் ஒருங்கி ணைப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் 2 கோடியே 42 இலட்சத்து 46 ஆயிரத்து 960 வீட் டுச் சமையல் எரிவாயு இணைப்புக ளும் 4 இலட்சத்து 75 ஆயிரத்து 527 வணிக எரிவாயு இணைப்புக ளும் உள்ளன. இதில் உணவகங்க ளுக்கு 27 ஆயிரத்து 329 இணைப் புகளும் தொழில் நிறுவனங்களுக்கு 54 ஆயிரத்து 116 இணைப்புகளும் கல்வி நிறுவனங்களுக்கு 15 ஆயி ரத்து 703 இணைப்புகளும் அடங்கும்.

எரிவாயு இணைப்புகள் வழங் கும் மூன்று எண்ணெய் நிறுவனங் களின் பிரதிநிதிகள், சமையல் எரி வாயு உருளைகள் 25 நாட்களுக்குப் போதுமான இருப்பு உள்ளது என் றும் வணிக எரிவாயு உருளைகள் இருப்பு மிகவும் குறைவாகவுள்ளது என்றும் தெரிவித்தனர்.

நிறுவனங்களுக்குத் தங்கு தடை யின்றி எரிவாயு விநியோகம் செய் யத் தேவையான எல்லா நடவடிக் கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் உணவகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிவாயு உருளை கள் வழங்கிட வேண்டும் என்றும் உணவக உரிமையாளர் சங்கங்க ளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

விறகுகள் பயன்படுத்தல், மின் சாரத்தை மாற்றாகப் பயன்படுத்தல், எரிவாயு உருளைகளைச் சிக்கன மாகப் பயன்படுத்தல் போன்ற மாற்று வழிமுறைகளைப் பயன்ப டுத்த முயற்சி மேற்கொள்வதாக உணவக உரிமையாளர் சங்கங்க ளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எரிவாயு இணைப்பிற்கு மாற் றாக மின்சாரத்தைப் பயன்படுத்திட தேவையான உதவிகள் வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

அனைத்து உணவு மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதி களும் தங்களை அழைத்துக் கூட்டம் நடத்தியதற்கு மகிழ்ச்சியையும் நன் றியையும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், அரசு தலை மைச் செயலாளர், நா. முருகானந்தம், தமிழ்நாடு மின் உற் பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டாக்டர் ஜெ.ராதாகிருஷ் ணன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அர சுச் கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் அதுல் ஆனந்த், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த கத் துறை அரசுச் செயலாளர், வி. அருண்ராய், கூட்டுறவு, உணவு மற் றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசுச் செயலாளர், டாக்டர் கே.எஸ். பழனிசாமி,

உணவுப் பாதுகாப்பு ஆணையா ளர், ஆர்.லால்வேனா, உணவுப்பொ ருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சிவ ராசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.